**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, DINDIGUL**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 210 /2015 |
| Deposition of witness for | : | PW: 2 |
| | | LW: 5 |
| Name | : | சையது அப்துல்காதர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20-07-2022

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் மதுரையில் குடியிருந்து சிறுதொழில் செய்துவருகிறேன். கடந்த 2002 முதல் 2015 வரை திண்டுக்கல் வேடசந்தூரில் செயல்பட்டு வந்த K.C. பால் நிறுவனத்தில் Despatch and Loggestic மேலாளராக பணிபுரிந்து வந்தேன். ஒவ்வொரு நாளும் வெவ்வேறு பகுதிகளிலிருந்து எங்கள் நிறுவனத்திற்கு பால் கேட்டு ஆர்டர் வரும். அதனை பாக்கெட் பால்களாக லாரி மற்றும் வேன்கள் மூலமாக அனுப்பிவைத்தேன். தஞ்சாவூர் மாவட்டத்தில் எங்களது நிறுவனத்தின் கிளை அலுவலகம் செயல்பட்டு வந்தது. அங்கிருந்த தினசரி கேட்கப்படும் ஆர்டர்களுக்கு வேடசந்தூர் K.C பால் நிறுவனத்திலிருந்து பால்பாக்கெட்டுகள் வேன்மூலமாக அனுப்பிவைப்பது வழக்கம். தஞ்சாவூரில் உள்ள கிளை மேலாளர் தஞ்சாவூர் மற்றும் சுற்றுவட்டாரப்பகுதிகளுக்கு பால்பாக்கெட்டுகளை பிரித்து அனுப்புவார். மேற்படி பால்பாக்கெட்டுகளுக்கான பணத்தை வசூல் செய்து தஞ்சாவூர் கிளை மேலாளர் லாரி (அ) வேன் மூலமாக அதன் டிரைவர் வசம் ஒப்படைத்து வேடசந்தூர் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைப்பார். தஞ்சாவூரில் இருந்து டிரைவர் மூலமாக பணத்தை அனுப்பிவைப்பதற்கு முன்பாக தஞ்சாவூர் கிளை அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேட்டில் எழுதி கையொப்பமிட்டு டிரைவர் பணத்தை பெற்றுவருவார். அதிகாலையில் வேடசந்தூர் தலைமை அலுவலகத்திற்கு டிரைவர் வாகனத்துடன் வந்துவிடுவார். சிறுநேரம் ஓய்வில் இருந்துவிட்டு காலை அலுவலகத்தில் கணக்கு பிரிவு மேலாளர் வந்தவுடன் பணத்தை ஒப்படைப்பது வழக்கம். 2014 ஆம் வருடம் ஜுன் 1ம் தேதி தஞ்சாவூர் கிளை அலுவலகத்திலிருந்து டிரைவர் பெருமாள் (எ) மணி (ஆஜர் எதிரி ) மூலம் பெட்டியில் போட்டு கொடுத்தனுப்பியை பணம் ரூ.1034822/- ஐ மறுநாள் தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்கவில்லை. நிறுவனத்தில் எதிரியை விசாரணைசெய்தபோது சரியான விளக்கம் தரவில்லை. ஆதலால் நிறுவனத்தின் கணக்கு பிரிவு மேலாளர் எதிரி மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில்  குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை என்று கூறினார்.

**மறு விசாரணை**

இல்லை

Taken down by me in Open Court read over to the witness in the presence of the accused, interpreted to him/her in tamil and admitted him/her to be correct.

(S/d.) N. Meenatchi, B.A.,B.L.,
Judicial Magistrate No:II
Dindigul

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

- - - - -

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, DINDIGUL

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 210 /2015 |
| Deposition of witness for | : | PW: 3<br>LW: 7 |
| Name | : | முத்துராஜ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20-07-2022

**<u>முதல் விசாரணை</u>**

நான் தறச்மயம் வேடசந்தூர் புலியமரத்துக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் KC நிறுவனம் ( டோட்லா) பாய்லரில் வேலை செய்து வருகிறேன். கடந்த 2014 ஆம் வருடம் செக்யுரிட்டியாக KC பால் , வேடசந்தூர் தலைமை அலுவலகத்தில் பணிபுரிந்தேன். நான் வேலைக்கு சேர்ந்து 5 அல்லது 6 மாதங்கள் இருக்கும். நிறுவனத்தின் மேலாளர் உத்தரவிரும், வேலைகளையும் செய்வோம். அதில் நிறுவனத்திலிருந்து வெளியே சென்றுவிட்டு வரும் வாகனத்தின் கி.மீ கணக்கெடுப்பது, வாகனத்தில் உள்ள காலியாக உள்ள டப்பாக்களை எண்ணி கணக்கு சொல்வது போன்ற வேலைகளையும் செய்வோம். பொதுவாக வாகனத்தின் டிரைவரிடம் கி.மீ கணக்கெடுப்பது, காலியாக உள்ள டப்பாக்கள் மற்றும் வேறுபொருள்கள் ஏதும் இருக்கிறதா என்பதை கேட்டு வாகனத்தை சோதனை போடுவது வழக்கம். ஆஜர் எதிரி எங்களது நிறுவனத்தில் டிரைவராக வேலைசெய்து வருகிறார். தஞ்சாவூர் கிளையிலிருந்து டிரைவர் மூலம் கொடுத்தனுப்பிய பணம் தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்கவில்லை என்று கேள்விப்பட்டேன். எவ்வளவு பணம் என்ற விவரம் பற்றி எங்களுக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை என்று கூறினார்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

Taken down by me in Open Court read over to the witness in the presence of the accused, interpreted to him/her in tamil and admitted him/her to be correct.

(S/d.) N. Meenatchi, B.A.,B.L.,
Judicial Magistrate No:II
Dindigul

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

- - - - -

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, DINDIGUL

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 210/2015 |
| Deposition of witness for | : | PW: 4<br>LW: 10 |
| Name | : | லோகநாதன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20-07-2022

<u>முதல் விசாரணை</u>

நான் வேடசந்தூர், புலியமரத்துக்கோட்டை தோப்புப்பட்டியில் மூடியிருந்து வருகிறேன். நான் KC பால் வேடசந்தூர் தலைமை அலுவலகத்தில் முதலாளி மற்றும் மேனஜர்களுக்கு டிரைவராக வேலை செய்து வருகிறேன். தஞ்சாவூரில் எங்களது கம்பெனியின் கிளை ஒன்று செயல்பட்டு வருகிறது. வேடசந்தூர் நிறுவனத்திலிருந்து தினமும் தஞ்சாவூர் கிளைக்கு லாரியின் மூலம் பால் பாக்கெட்டுகளை அனுப்பிவைப்பார்கள். கிளையில் வசூலிக்கப்படும் தொகையை பேக்கில் வைத்து மேலாளர் டிரைவரிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டு அதே வாகனத்தில் அனுப்பிவைப்பது வழக்கம். டிரைவர் வாகனத்துடன் காலையில் வாகனத்தை நிறுத்தி மேலாளரிடம் பணத்தை ஒப்படைப்பது வழக்கம். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், எங்கள் எங்களது நிறுவனத்தில் டிரைவராக பணிபுரிந்தார். கடந்த 01.06.2014 அன்று தஞ்சாவூரில் இருந்து அனுப்பிவைக்கப்பட்ட பணம் ரூ.1034822/- காணாமல் போனதாக டெஸ்பா மேனஜர் சொல்லி எனக்கு தெரியும். மேனஜர் , டிரைவர் வாகனத்தை நிறுவித்துவிட்டு, பணத்தை ஒப்படைக்காமல் போய்விட்டார் என்று மறுநாள்காலை என்னிடம் சொன்னார். நிறுவனத்தில் இருந்து புகார் கொடுத்ததாக தெரிந்துக்கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில்  குறுக்கு விசாரணை</u>

**வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை என்று கூறினார்.**

<u>மறு விசாரணை</u>

இல்லை

Taken down by me in Open Court read over to the witness in the presence of the accused, interpreted to him/her in tamil and admitted him/her to be correct.

(S/d.) N. Meenatchi, B.A.,B.L.,
Judicial Magistrate No:II
Dindigul